திருச்செந்தூர்

மும்மணிக்கோவை.

திருநெல்வேலிஜில்லா

ஆற்றூர்-திருச்சிற்றம்பலப்பிள்ளையவர்களின்

குமாரரும்

நாங்குனேரிதாலுக்கா ஆபீஸ் கிளார்க்குமான

[illegible]

A. T. இராமலிங்கம்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

உறையூர்ச் சைவசித்தாந்த சபையாரால்

சென்னை

பண்டித மித்திர பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1904

சிறப்புக்கவிகள்.



திருவரங்கம் பெரியகோயில் வித்துவானும்

அறத்துவஜநாவலரெனப் பட்டம் பெற்றவரும்

பென்ஷன் ரிவினியூ இன்ஸ்பெக்டருமாகிய

பிரமஸ்ரீ-சுந்தரராஜையங்காரவர்கள்

இயற்றியது.

உலகுபுகழ் மகம்பதினெட் டெனுற்றசித்த மூர்த்தியரு ளுணர்த்தப் பெற்று, மிலகுதிருச் செயந்திப்புரத் தெந்தையடி யிணைமலரை யிதயம் வைத்த, நலமிகுறு பன்னயமும் பொருந்தியமும் மணிக்கோவை நவின்றான் தெய்வப், புலமைசெறி யாழைநக ரிராமலிங்கம் பெற்றபுகழ் புகலற் பாற்றோ.



திருவாவடுதுறையாதீனம்.

ஸ்ரீமத்-கந்தசாமித்தம்பிரான்சுவாமிகள்

இயற்றியது.

சீர்பூத்த சிவவேடப் பொலிவுமுருஞ் சிவஞானச் சிறப்பும் பெய்தித், தார்பூத்த கைப்பெருக்கு நிறைஞான சித்தரருள் தழைக்கப் பெற்றோ, னேர்பூத்த வாழைநக ரிராமலிங்க நாவலன் னினிது சொற்ற, நார்பூத்த திருச்செந்தூர் மும்மணிக்கோவைப்பெருமை நவிலற் பாற்றோ.

உ

முருகன்றுணை.

சாத்துகவிகள்.



மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானாகிய

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

திருக்குருகூர் ஞானசித்த தேசிகன்றாளைத்தினமுஞ் செப்பி வாழ்ந்தவ், இருக்குமுயர் த[illegible]வதனு விருந்தமிழி னையமனைத்து மினிது தேர்ந்தே, யுருக்கமுடன் றிருச்செந்தூர் மும்மணிமாலைச் சொற்றனு லுலகமேத்த, விருக்குமிமா தவராறை யிராமலிங்க காவலனு மெழின்மிக கோனே.

மதுரைமாநகரம் வித்வான்

ம. தெய்வநாயகப் பெருமாள் நாயுடு

அவர்களியற்றிய

நேரிசைவெண்பா.

தெள்ளியர்வா ழுஞ்செந்தூர்ச் செட்டிக்குச் செந்தமிழ்த்தேன்
துள்ளியதோர் மும்மணித்தார் சூட்டினான்—வள்ளியொடு
தெய்வானை யூடிற் றெ[illegible]லான்றூற் றீர்ப்பரிதென்
றுய்வா னிராமலிங்க [illegible]

காதன்மிகுஞ் செந்[illegible] றருக்கச் செந்தமிழான்
மூதலம்வாய் மும[illegible] —[illegible]யாதலுற்றான்
ஆத்தூர்த் [illegible] லிங்கம்
நாத்தூர்வாழ் [illegible]

கோபாலசமுத்திரம் வித்வான்

சண்முகதாச பிள்ளையவர்களியற்றிய

நேரிசைவெண்பா.

செம்மணிமிக் கோங்குதிருச் செந்தூர்க்கந் தன்கழற்கு
மும்மணிக் கோவை மொழிந்தணிந்தா—னிம்மணினர்க்
கின்புமலி வாக்கு மிராமலிங்கப் பாவலவ
னன்புமலி வாக்கருளி னால்.

ஆற்றூர்

திரு· சோமசுந்தரப்பிள்ளையவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

திருவளர் வழுதித் தேயம தனிற்
றெக்கண பாகஞ் சிறந்துமிவ் வுலகி
னல்வளஞ் செறிந்த பன்னகர் தனிலு
மிக்ககர்ச் சீர்தா னென்னகரெய்து
மெனச்சொலு மாறிங் கிணையிலாதான
செந்திலம் பதிவளர் கந்தவே ளெம்மாற்
கன்பொடு மநேக ரணிபல வணியுங்
கோவையாய்ச் சேர்த்துக் குணமொடு பொருந்தச்
சாத்தின தோடு சாற்றுதற் கேற்ற
பாமா லைகளும் பலவமைத்தாரத்
தேமா லைகளுட் டிலதமாமிந்த
மும்மணிக் கோவை யெனமூ தறிவோர்
போற்றிடு மாறும் பொலிவுறு மாறு
மகத்திய முனிவ னருளாற் பொதிகை
யிருந்துற் பவித்தே வினையில்சீ ரெய்துந்
திருநெல் வேலி யெனுந்திரு நகரை
மருவியே வருமப் பொருவிலாப் பொருநைப்
பாங்கரே யுற்றுப் பகர்வரு தலமொடு
தீர்த்த மூர்த்திச் சிறப்புமே சேர்ந்து
சோடச கலையுந் துகளறத் துன்ப

மேவிட மெலிந்து விளங்குத லிலாது
வாசா ணறையு மருளிலாச் சாப
நீங்கு மாறெங்கு மோங்குமா தலமெலாஞ்
சுற்றியே திரிந்தபின் றுன்மைசேர் மான்மியப்
பெற்றவோர் தலமெனப் பெருமகிழ் வொடுமேதி
சேரிநன் கமர்ந்து சிறந்தவோர் பூசனை
யாகம விதிப்படி யாற்றியச் சாப
நீங்கிமுன் போற்றக் நிறைகலை துளங்கப்
போற்றுறு நலமெலாம் பொருந்தியே பொலியக
கண்டதோர் நகராம் விண்டுமே தவழும்
பொழில்கள்சூழ்ந் தோங்கும் பொருவிலா வாறைட
பதிதனிற் கங்கா குலமுறு குணங்கள்
பத்துமே குறைவறப் பெற்றுமே சிறந்தோன்
சைவநன் னெறிவழாஅத் தெய்வமா பக்தி
சேர்ந்தவென் றந்தை திருச்சிற்றம்பலமா
மேந்தல்செய் தவமே யெழிலுருக் கொண்டாங்
குற்றவிவ் வுலகி லுதித்துநற் குணமெலாம்
பெற்றவோ ரெம்பி பெற்றமே றியபிரா
னருமைநன் மகனு மருள்செயு முருகன்
ருசனு யன்னான் றகைமைசேர் பாதத்
தெந்தநா ளுந்தா ளிணையிலா வன்பு
சிந்தையே முதலாந் திரிகரணங்களுஞ்
சுத்தமாய்ச் செய்யுந் துகளறு பண்பொடு
மிசைமிக வெய்திடு மிராமலிங் கந்தான்
சொற்றன னம்மணிக் கோவையின் சுவைபல
னிற்றென வுரைசெய யிவ்வுல கர்க்கோ
வாயிர நாவுடை வாதிசே டற்கு
மியலா தெனினு மிலக்கண வரம்பி
னமையுநற் சுவையு மறமெலா மியற்றி
யோங்குநற் றவமு முனாற்றினோ ரடையும்
பலனெலா மிதனைப் பயனொடு மொருகா
லயர்த்தியோ டேனு மன்பிலா தேனுங்
கேட்கினு மடைவரென் கிளத்துநற் பெருமையு
முடையதா மிதுவென வுரைசெயு முலகே.

அறுப்புக்கோட்டை க்ஷத்திரிய வித்தியாசாலை

முதல் அஸிஸ்டெண்டு

எம். கோவிந்தசாமியவர்களியற்றியது.

பொன்னேர் மருமனும் வேனும் போற்றும் புனைமலர்த்தாட்
கொன்னே ரயிற்கரத் தெந்தைக்கு மும்மணிக் கோவைசொற்றுன்
மின்னே ரிடைமலர் வாணியின் செட்டுடன் மெய்விளர்ப்பத்
தன்னேரி லாறை வளராம லிங்கத் தமிழ்ச்சிங்கமே.

சேரன்மாதேவி எ - அ - கலை - ஆபீஸ் கிளர்க்கு

முத்தையபிள்ளை யவர்களியற்றியன.

அறுசீர்விருத்தம்.

தெங்கினங் கமுகு சூழ்ந்த செந்திலம் பதியில் வாழுந்
திங்கள்வே ணியனன் றீந்த சேவலங் கொடியோன் மீதி
லெங்கள்சீர் குலநற் றோங்கு மெழிலிராம லிங்க வண்ணல்
புங்கவ ரமுதம் போலும் புகன்றனன் கோவை நூலே. (௧)

நேரிசை வெண்பா.

கள்ளக் கருத்தினர்கள் காணருமின் னூன்பகிமை
வெள்ளப் பெருக்கம் விளங்குமே—யுள்ளங்
ஊறந்தமே தையோர் சுவைப்பால்கற் கண்டே
சிறந்தவிர்செந் தேனென்பார் தேர்ந்து. (௨)

பெருங்குளம் மாத்தாண்டம்

சி. சுப்பிரமணியபிள்ளையவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

சீருறு முத்தமிழ் தேர்ந்திடு கம்ப
னேரெழுபதனி வியம்பிய புகழுந்
தென்னன் செல்லைச் சிறையிட வன்று
முன்னிறீஇப் படைத்த மூவர்ச் சீர்த்தியு
மூலவாக் கோட்டை யொருவ னடைந்ததும்
புலவோ ரன்றியிப் பூவெலா மறியு
மவிசொரிந் தாயிரம் வேட்டலி னென்ற

னுயிர்செகுத் தன்னை [illegible] னென்றெழுந்
வள்ளுவர் மூதுரை மறைக்குமே லன்றே
வித்திறத் தோங்கு சுத்தசைவ குலந்
தொன்றுதொட் டோங்கித் தோன்றுறு தொல்பதி
தென்னாறு டகவிம திறந்திடு மாறை
நூக்கனி சிதையக் கக்கிட நறைபாய்ந்
திக்கின் சுவைகைப் பெல்லா மெய்து
நத்தை நதிநெனநக்கோத திரியெனப்
பணைநடப் பதுமம் பற்றிவைக றையின்
முழங்கிடக் கேட்டம் மூதூர் விழிக்குந்
திங்கடன் மாசே தீர்த்தபுட் கரணி
தங்குமன் னுளர்நோய் தவிர்த்தலா மணிநோ
கார்மதி விவரக் கநிறக் களிறு
பூட்கை நீங்கப் பிழிந்தே யருந்து
மாபெருங் கோயின் மன்னுசோ மேசர்
சோமசுந் தரியா டோன்றுமா சந்நிதி
மகிமையோர் லட்ச வாயுள வாயினு
முரைத்தற் பாலதன் றோர்மீ னத்திற்
றுவசா ரோகணந் தொட்டோர் பானாட்
டிருவிழா வாற்றுஞ் சிறப்போ வென்னி
னன்கு வருணமு நமதென வொருங்கே
நத்தமி னந்தமிழி தாரணி யொன்றற
வண்ணல் வதுவைக் கவினுவரு மேகத்
தென்னு டியரவோர் சிறுமுனி விடுத்தபோ
லின்னாட் பத்து மேகியம் முனிவன்
மன்னவே வேண்டும் வடபா லதனின்
வீதிக ளெல்லாம் விளங்குபூம் பந்த
ராதவன் றனைமதி யாக்கிடு நண்பக
லூடுசிற் சிலவெளி யுளவற் றூடே
வான்மீ னிங்கு வந்தபோற் றோற்றும்
பொற்றோ ரணங்களிற் பொலிபூங் கொத்தொடு
நற்று மனைமலர் நறவே யூறு
மி[illegible]புற மணியா யிலங்குங் கத்தி
லொருபாற் கனியு மொருபாற் காயுமா
யர்த்த நாரீச ராகந் தோன்று
மவற்றி னிடைக்கிடை யங்கத லிக்கீங்

கனிவுநீர்த் தேங்குறக் கக்கிக் கிடக்கு
மெங்கைதசோ மேச ரேந்திடை யாட்டுஞ்
சந்தனம் பலவகைச் சாந்தின் மீதே
பன்னீர் மாரிப் பாங்காய்ச் சொரிதலின்
வழுக்கும் வீதியின் வணமா கரியு
முண்மினென் னொலியு மோர்பா லெண்வகைப்
பல்லிய வொலியும் பயோததிக் கேஇத்
தாயின்மா லொ[illegible]த்துந் தோன்றுதி வர்த்தி
யிரவிற் றுவாதசா தித்தராப் பொலியுங்
கம்பவேட் டதிர்ச்சி கண்டிடி நடுங்கும்
வாணவேற் றுமையால் வான்மின் னஞ்ச
மந்தர துந்துபி விந்தையின் முழங்க
விந்திர னுலகிற் றந்திடு கற்பகச்
சுந்த மலரையு வந்தே தேவர்
மழையெனப் பெய்யுமம் மாட்சிமை யீங்கே
விரித்தலு மரிது மேலுமம் மாநக
ரெவ்வகை யாலு மிலங்கிடு மாங்கே
சைவர்தங் குலமே தழைத்திட வந்தோ
னக்குலத் திலக னிக்கிலு மின்சொற்
றக்க வ[illegible]றநெறி புக்கியெந் நாளும்
விலக்கிய[illegible]வொரீஇ விதிவழி நிறீஇ
யில்லற நடாத்தி யிலங்கிடு மேலோ
னனமுந் தனமுந் தினமுமன் போடே
யகுதி யதிதி யார்க்கு மொருங்கே
பாத்திர மறிந்தே பண்பின் னல்குஞ்
சாத்திர மாய்ந்தோன் றருமமே யுருவாய்
வாய்த்தவென் மாமன் வள்ளல் திருச்சிற்
றம்பல மெனும்பே ரமைந்திடு தக்கோன்
முந்திய தவத்தால் வந்திடு மிராம
லிங்க மென்றோர் பங்கயில் கல்வித்
துங்க மனக்கவிச் சிங்க மென்போன்
பொறைநிறை யுடைமை பொருந்தக் கண்டே
யாங்கிலே யமன்னர் நான்குநே ரியெனுந்
தாலூக் கிளார்க்காய் மேலோங் கிடவே
வைத்திடு தக்கோன் மதியின் மிக்கோன்
சுன்னாகன் ஞாலக் கவியுக வரத

மன்னனொரு முருக னெழின்மான் மருகனா
றனைக்கா ணுக்கண் முகமீ திருபுண்
ணெடுத்தேத் தாக்கை தொடுத்திடு மற்கை
கூடா ராக்கை காடார் சேக்கை
பாடார் வாயும் பாழ்வா யென்றே
மும்மணிக் கோவை மொழிந்திட வாங்கே
சொல்லும் பொருளுந் தொடைநடை துறையு
மெல்லாச் சுவையு மியைந்தது கண்டு
கேள்வன் மெய்ச்சக் கேட்டே தெய்வ
யானைதன் றந்தைக் கவியிற் புகல
வந்து தினஞ் செந்தி லடைந்தார்ச்சிப்பா
ருதவி னீதோ ராத்துணைக் கருவி
யெனவொப் புவனே யிவ்வுலகத்தவர்
பவக்கடல் தாண்டி யலைப்படா துடல
முய்த்திவற் காமா லுறுதியிந் நூலே.

சாத்துகவிகள் முற்றிற்று.

முருகன்றுணை.

முகவுரை.

சிவபெருமான்றிருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களனைத்திலுஞ் சிறப்புற்ற சமையமெனவெடுத்தோதுஞ் பெருமைவாய்ந்த சைவ சமயத்தைத் தழுவிய மரபிலே இந்நூலாக்கியோன் ஜெனித்திருந்தும், சிவஞானப் பொலிவுடைய பெரியோர்களுடைய அனுக்கிரகமில்லாததால் கடைத்தேறுஞ் சன்மார்க்க வழி தோன்றாது, என் செய்யலாமென அதிபலிய இசையிலேயே பரதவித்துக் கொண்டிருக்கு மவையம், கருணையங் கடலாகிய பரசிவத்தின் மேனிதாங்கி திருக்குருகூர் ஞானசித்தசுவாமிகள், இந்நூல் ஆக்கியோனது ஜெனன பூமியாகிய தாம்பிரவர்ணி தீர்த்தத்தில் இப்புண்ணியநதி மகோததியோடு சங்கமமாகிற விடத்திற் கருகாமையாய் விளங்கப் பெற்றிருப்பதும், சந்திரபகவான் சிவபெருமானையர்ச்சித்துக்குருசாபம் நீங்கி யுய்ந்ததும், சோமீச் சுரநகரமெனப் புராணங்கள் கூறுவதுமாகிய "ஆற்றூர்" என்னுங் கிராமத்திற்கு எழுந்தருளி வரக்கண்டு, அக்கிராமவாசிகளுடன் இவ்விளையோனுஞ் சென்று வழி பாடியற்ற, உள்ளன்புடையார் எத்தகையராயினுமவர்களைத் தெளிவித்து அநுக்கிரகிக்குங்கருணைநிறைந்த அக்குருசுவாமிகள் பாலனையபிமானித்து அநுக்கிரகித்தருமொழியினையே கடைப்பிடியாகக் கொண்டு "ஆதியிலே முருகவெனு மொழியொன்றோதியறிவுறுத்தி யாற்றூரிலடிமையாகக் கோதிலாச் சிவஞானசித்த வேறேகுருவாக வெழுந்தெனையாட்கொண்டதம்மா" என்றதற்கேற்ப சதாகாலமும் இச்சுவாமிகளின்றிருவடிகளே சரணாகப்பற்றித்தியானித்துத் திருச்செந்தூர் முருகப்பெருமானை உபாசிக்கு நெறியே சன்மார்க்கநெறியாய்க்கொண்டு ஆங்காங்கே அவ்வவ்வமையத்தி லவனருளருளுமாறு அவனருளை வியந்து பாமாலை தொடுத்தலும் அவன் திருவடிக்குப் பக்தி செய்தலுமே மெய்ப்பொருளாய்க் கொண்டு ஆக்கியோன் இதுகாறுமாக்கிய செந்தமிழ்ப் பாமாலைக ளனேகமாயினு மவைகளைப் பாதுகாத்துவையாது போனவைபோக எஞ்சியவற்றுள் "மும்மணிக் கோவை" என்னுமிப் பிரபந்தமொன்று. ஐந்திலக்கணமுங் கற்ற

பண்டிதர்களாலும், அருட்பிரசாதமிகு கவிகள் பலராலும், தெய்வத் தன்மை பொருந்திய மகான்களாலும் இயற்றப்பட்டனவாயும், இயற்றப்படுகின்றனவாயும், இயற்றப்படுவனவாயுமுள்ள நூல்களுக்கு மத்தியில், சிற்றறிவுடைய இவ்வாக்கியோனது நாவால் நடந்ததெனுங் குற்றமுடைத்தாதலால், இந்நூலும் நூலெனத் தலை நீட்டி வெளியே வரலுந்தகுமோ வெனுமையமொன்று மேலிட்டு யிதுகாறும் வெளியிடாது தாழ்த்தினும், ஆக்கியோனது ஞானகுருவாகிய ஞானசித்த சுவாமிகளின் அநுக்கிரக பலத்தால் ஞான சொரூபியாகிய முருகக்கடவுளின் திருவருட்டிறத்தை வியந்து பேசும் நூலாமெனு மேன்மையொன்றிருப்பதாலும், தனது ஞானாசாரியன் பெருமையை வெளிப்படுத்த வேண்டுமென்ன ஆக்கியோனுக்குண்டான வன்பு நிகழ்ச்சியாலும், இந்நூலை யிதுகாறு, படித்துக்கேட்டுச் சிந்தித்த நண்பர்கள் பலருமிது மிகுந்த குதூகலத்தையும், முருகபிரானிடத்து விசேஷ அன்பையும் பக்தியையுமுண்டுபண்ணுவதுடன் நினைத்தகாரியஞ் சித்திக்கச்செய்யு மியல்புடைத்தாயுமிருக்கிறதெனச் சொல்வதாலுமிது வெளிவரின் அனேகர்களுக்கு இகபரத்துக்குத் துணைக்கருவியா யிருக்குமெனவோ ருறுதியுண்டாகிறதாலும் இந்நூலை ஆக்கியோனது ஞானகுருவாகிய ஞானசித்த சுவாமிகளின் அநுக்கிரகத்தைக் கைக்கொண்டு வெளியிடலாயிற்று.

முகவுரை முற்றிற்று.

உ

திருச்செந்தூர் மும்மணிக்கோவை.

காப்பு.

நேரிசைவெண்பா.

கார்படியு மாடக் கடிமதிலார் செந்தூரிற்
றூர்படியு மொய்ம்பாருஞ் சண்முகனூர்—சீர்படியு
மும்மணிக் கோவைக்கு முந்துதுணை தந்திமுகன்
செம்மணியார் பாதச் சிலம்பு.

ஞானாசிரியர் வணக்கம்.

அறிவாளன் றென்குருகை யாண்டகைமெய்ஞ் ஞானி
மறுவிலா ஞானசித்த வள்ள—லொறுவா
துரைத்தமொழி கேட்டமுத வொண்டொடியாள் செந்தூர்
வரைத்தலைவா வென்பாள் மருண்டு.

குருகை நகராளன் கோதிலா ஞான
குருவா யெழுந்தருளுங் கோமான்—றிருவருளாற்
பெற்றமொழி யொன்றையுமே பேணின் மடநெஞ்சே
பற்றலாஞ்செந் தூரான் பதம்.

பாப்பாடத் தேர்கிலாப் பாமரனைப் பேரறிவின்
மூப்பாள னென்குருகை மூர்த்தி—காப்பா
அருளியவவ் வாசகமே யாதரவாய்ச் செந்தூர்
முருகனையே காண்பாய் முயன்று.

நூல்.

நிலமண்டிலவாசிரியப்பா.

திங்களார் வேணிச் சங்கரன் றேவி
யெங்களார் நெஞ்சச் சங்கியே நாளுந்
தாயினு மிக்க தயாவுட னளித்து
நாயகி யெந்தாய் நயமுறு மடிமேற்

றங்கியே பாதக் கிண்கிணி தயங்க
விங்கித மொழியே பொங்கிய வாயாற்
பச்சை நரம்பே மெய்ச்சார்ந் தோங்கு
கச்சார் கொங்கை பிச்சே சவ்விப்
பருகிடு குமர ரியல்வழி நில்லா
துன்னரு மூலைபொற் கிண்ணத் தாக்கி
வார்த்திடு மமுத மேற்றுணு மிளையோன்
கருமுகி றவழுந் திருவார் பண்ணை
யுருகியே பாடுங் குருகார் சோலை
யார்ந்திடுஞ் செந்தூர் தேர்ந்திடுங் கோயிற்
சேர்ந்திடு மெய்ம்மையா டெய்வந்தானே. (அ)

நேரிசைவெண்பா.

தானேவந் தன்புடையார் தங்கவலை தீர்த்தருள்வான்
றானேநஞ் செந்தூர்சேர் சண்முகனே—மேனேநீ
துன்புறாத நெஞ்சே துதியாயெம் வேலவனை
யின்புறலா மிங்கே யிருந்து. (உ)

கட்டளைக்கலித்துறை.

இருந்தது போலிருந் திந்நேர மென்பது மின்றியுயிர்
கரந்திடு மம்மவைப் போமெம தூதர் கயிறுகொண்டே
விருந்தயில் வோரில் விரைகுவ ரந்நாள் விடியுமுனே
பொருந்திய செந்தூரிற் கந்தனைச் சேவித்துப் போற்றுவனே

நிலமண்டிலவாசிரியப்பா.

போற்றுறு மிறையே சாற்றிய கவிக்கு
நீற்றொளி படரு மேற்றரும் வன்னி
நெற்றியங் கண்முன் பற்றிய போதங்
குற்றமென் றம்மா வெற்றுரை புரிந்த
நற்றவப் புலவ னுற்றதோர் பொய்கைக்
கரைச்சார் பிருந்து கற்றைபஞ் சடையான்
பரையாள் பங்கன் மலையார் பாதத்
தன்புடன் பூசை யின்புடன் புரிநாண்
முன்புரி வினையின் றன்பய னாக
வக்கரை மீதே நிற்குமோர் தருவின்
மிக்குயர் கிளையிற் றிக்கென வீழ்ந்த
பச்சிலை யொன்றுமால் விச்சையி தென்ன

வொருபாற் புள்ளாய்க் கரைவா ழுயிரு
மொருபாற் புனலார் துறைதருங் கயலு
மாகவோ ருடலே யிருவகை யுயிர்கள்
பாகமாய்த் தாங்கு மாகமாய் மாறி
யிலையார் பொய்கைப் புனலிடை யொன்றும்
நிலையார் புனல்சூழ் நிலனிடை யொன்றும்
படர்வது கருதி யுடல்கொடு பொருதே
யிடர்து பெருக நடைதரு சமைய
மண்டையி லிருந்தே கண்டவ னகைக்
கொண்டதோர் பூசைக் கிரண்டகஞ் செய்தா
னென்றுமோர் குற்ற மேற்றியப் புலவன்
றன்னையோர் பூதஞ் சார்குகை யதனிற்
சிறையிடப் புலவன் றெளிகில னாகி
மறைமுதற் பொருளைச் சிறையன முகைத்த
பிரமற் கருளிய சரவண பவனுங்
கரமெனு மலையே தாளம தள்ளிச்
சிந்துஞ் செந்தூர்ச் சேவக னல்லாற்
பந்தஞ் செய்யு மிந்தவென் னல்ல
தீர்ப்பா ரொருவற் பார்ப்பேன் கொல்லோ
காப்பான் கந்தன் றாப்பா யென்றே.
செந்தமிழ் கொண்டே பைந்தொடை சூட்ட
வந்தமி லழகார் சந்தமார் தாளிற்
கொண்டருள் புரிந்து குகைநின் றவனை
நீட்டிய பொன்னார் வேலவ னருளே
யீட்டுதல் பொருளாய் நாட்டமுற் றேனே. (௪)

நேரிசைவெண்பா.

நாடுபுரு டார்த்தமெனு நான்கினுண் மேலானபத
வீடுபெற நின்னையென்பார் மேலாவா — ராடுமயில்
மந்தாரங் காட்ட மனமகிழ்ந்தார் செந்தூரிற்
கந்தாவுன் சேவடியைக் கண்டு. (௫)

கட்டளைக்கலித்துறை.

கண்டுநல் வீடுறப் பாசார விந்தங் கருதிமலர்
கொண்டுகை கூப்பியே மெய்யடி யார்தினங் கூடுசெந்தூர்த்
தண்டுழாய் மார்பனுஞ் சாரங்க பாணி தனிமருகா
வண்டுபண் கொண்டவுன் செந்தாமரைப்பாதம்வாழ்த்துவனே.

நேரிசையாசிரியப்பா.

வாழ்தருஞ் சைவக் கூழ்தழைத் தோங்கத்
தாழ்தரு மமண்வேர் வீழுற வண்ணம்
நாடார் காணக் கூடா நாதன்
தோடார் காத னேடாரு கொன்றை
பீடார் வேணி சூடாதி பெந்தை
மாடா ரன்பர் வாடார் போற்றும்
பீடார் சிகரக் கோடாலி கொண்டு
வீட்டியே மேலும் போட்டியா யன்னூர்
பாட்டுக டீயில் வாட்டியும் வைகை
யோடுறு புனறன் னேடெதிர் செல்லப்
பாடிய புலவ னீடிய செந்தூர்
வேலவ வின்றே மேதினி விளம்பல்
சாலவு மெய்யே போலு மஃதின்றே
லேலவார் குழலி பால்கொடே யன்றான்
றோடுடைய செவியெனப் பாடிய வந்நாள்
பீடுறு மெல்லடி வாடுறப் பிரம
புரமது குறுக லெவன்கொல்
குரவணி குமர குருபர குகனே. (எ)

நேரிசைவெண்பா.

குகனீடு வேலுதவுங் கொற்றமெமக் குண்டாம்
பகடேறு மந்தகனே பாராய்—நகமெலாஞ்
சென்றுநின் றங் காடியவச் செந்தூரான் சேவடிக்கே
யென்றுமிங் காட்பட்டே மிசைந்து. (அ)

கட்டளைக்கலித்துறை.

இசைந்தமுன் பார்தெரிந் தீன்றவன் றந்த விழையிருப்ப
விசைந்துபந் தேதெனுங் கோட்டியர் மாமுலை யேந்திழையா
டசைந்ததண் கைகொடு வந்தனைக் கட்டித் தழுவியதென்
னசைந்திடுந் தும்பிசெந் தூராயக் காஞ்சிபுரி யச்சமன்றே.

நிலமண்டிலவாசிரியப்பா.

அன்றிலும் பேடு மொன்றிய பாங்கா
யென்றுன தருளார் பொன்றிரு வடியைப்
பெறுவேன் செந்தூர்த் துறைவா யுறைவா

யிறைவர் வெள்ளைப் பிறையார் வேணிப்
பெருமா னருளால் வருமா முருகா
வுமையாய் மறையின் பொருளார் வாயா
வென்றனைப் பல்காற் சென்றுநீ யாடுங்
குன்றுதோ றாடி யென்றுநான் றொழுவேன்
றலைவிதன் பதியை வலியவே யணைய
விலைவிதி யென்னு முலகமிங் கம்மா
நீதிநான் வேதத் தாதியாம் பொருளை
யோதிய வுனக்கே யோதுதன் முறையோ
யாதலா னீயே நீதறக் கூடிப்
பேதியா தென்னைப்பாதுகாத் தருள்வாய்
பங்கய முகத்து மங்கைமார் மார்பிற்
கொங்கையோ வென்னத் தெங்கின் வாயுச்சி
தொங்குநீள் கனிமேற் பொங்கிய வவாவால்
மந்திபாய்ந் தோடுங் கந்தமார் சோலை
சொந்தமாய்க் கொண்ட செந்தூர்த் தேவே. (க0)

நேரிசைவெண்பா.

தேவாவென் றன்னருளைத் தேடாம லின்பருண்மா
தேவாவென் பேணடைத றேரேனே—யாவாவென்
றோதாயே லுண்டோ வுரையாய்செந் தூரமரு
காதாவிங் கஞ்சலென்பார் நன்று. (கக)

கட்டளைக்கலித்துறை.

நன்றிது தீதென் றேயறி யேனை நவில்கவியென்
றின்றுமெம் வேலவன் சொல்வதை நோக்கி லிலக்கணங்கற்
றென்றுமே பொய்யா மொழிப்புல வன்கவிக் கிச்சையுற்றே
யன்றொரு வேடனாய்ச் செந்தூரான் வந்த ததிசயமே. (கஉ)

இணைக்குறளாசிரியப்பா.

சயம்பட வேண்டிப் பயம்படு பெரியோ
ரியம்பிடு முறையே நயம்படு கவிசொற்
புலவரைப் போல நலமிலே னெனினு
மலகில்புன் சொல்லே நிலவிய மொழியாற்
செந்நெலார் பண்ணை மன்னுசெந் தூரிற்
பன்னிரு கரத்தோ டென்னையாண் டருளு
முன்னையு முன்பா லின்னருள் பெற்ற

பொன்னனை யாரா மன்னனை யிருவர்
தம்மையும் பாடி யிம்மையார் பயனோ
டம்மையும் வீடாஞ் செம்மையார் பயனும்
பெறலா மெனுமோ ருறுதி
திருவரு ளாலே யொருவது கருதி
மருமமா வொரு மாமரு கோனே
பருவரல் போக்கு மொருகுரு பரனே
செந்தில்வா ழெங்கள் கந்தனே யென்று
குழறுமென் மொழியிங் கழகில தெனினு
மழலையார் மொழிதன் குழவிவாய்க் கேட்கப்
புளகித மிஞ்சி யுளமகிழ் தாயிற்
கேட்டனை மகிழ்ந்து வேட்டதிங் கருளாய்
நாட்டிய மடவார் கூட்டமார் செந்தூர்
மாட்டியர் சந்தக் கோட்டுறை வோனே. (கங)

நேரிசைவெண்பா.

ஓங்காரத் துட்பொருளை யுண்பார்கட் குற்றவனை
யாங்காரத் தற்றோர்க்கிங் காகாதவன் — பாங்காகச்
செந்திநகர் சேர்பவர்தஞ் செம்மலினை தீர்த்தருளுங்
கந்தனுக்கே சொல்வேன் கவி. (கச)

கட்டளைக்கலித்துறை

கவிக்குலந் தானையாய்க் கொண்டுபத் தூச்சிரங் காய்ந்தவன்முன்
புவிக்குளே சென்றுதான் றேடியுங் காணாத பொன்னடியான்
செவிக்குளே வேத முதலெழுத் தோதிய சேயெனலாற்
புவிக்குட்செந் தூரனைப் பெற்றவன் றேவெனப் போற்றுவனே.

நிலமண்டிலவாசிரியப்பா.

வன்மனத் தார்க்கும் நன்மையே புரியுந்
தன்மையார் நட்பிங் கின்மையா லந்தோ
கெட்டே னிறைவா துட்டர்க ளுறவா
லெட்டினை மட்டுந் தட்டாது புரியு
மிட்டையும் விட்டேன் கட்டமும் பட்டே
னீடுற வோங்க நாடிய பயிருஞ்
சூடுறி னம்மா வாடலு மியல்பே
யாயினு முடனே நேயமாய் வானந்
தாயெனப் பெய்யில் வீயுமோ சொல்லா

யன்னபாங் காகவென் னின்னறீர்த் தாளு
முன்னரு ளென்றே யெண்ணியிங் குற்றேன்
வேற்படை யன்னலாம் வேள்படை பயின்ற
யப்பதி தனிலே யனங்கவே டானு
மென்படை பயில்வே னைமுர சறைந்து
வந்சவா றேய்ப்பச் சிங்தொலி செய்ய
அன்னநேர் நடையார் பின்னுவார் சடையின்
மின்னைநே ரிடையிற் றன்னுமால் கொள்ள
மற்கட மனைத வாட்டொன் றனது
விற்படை தொடுத்து முற்பட வைத்தான்
கொல்லோ வென்னைக் குளிர்புன மெங்கும்
கன்னலார் செந்தூர்க் கருணையங் கடலே. (கசு)

நேரிசை வெண்பா.

கடன்முடிவெற் பாற்றல் கருக வயில்வேலோ செவ்
வடல்வழுதிக் கேற்றதே யென்பார்—தடவரையைச்
செற்றதனைக் கேற்குமோ செந்தூரா யும்பர்கோன்
பெற்றமகட் கேச்சமுந்றே பேசு. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

பேசா திருந்தவோர் மூங்கையாம் பிள்ளையும் பேசிடவே
டாசாங் குசம்புயஞ் சேர்ந்தவ டந்திடு பாலசெந்தூ
ரீசா புரிந்தாய் பிரயாச மற்றதொன் றின்றியெனைப்
பேசா திருந்திடச் செய்தருள் வந்திவண் பேணியின்றே. (கஅ)

நிலைமண்டில வாசிரியப்பா.

இன்றியே யமையா தென்றவவ் விடமே
யொன்றொரு வினையை நன்றெனச் செய்து
மன்றது தருபயன் மன்றனார்க் கென்றே
யொன்றிய கனூத்தோ டென்றுமே யுறையும்
பெரியோர்க் கென்று முரியே னாகப்
புரிவான் கருதி யருளொடு நின்றான்
வரியார் நீலக் கரிதோட் சேரும்
பெரியான் வேத வரியார் வாயா
னரியான் வானோர் பிரியாது வேண்டப்
பரிசேர் முதலா யுரிமையிற் பற்றிப்
பொருதவோர் கரியு மரியுமே வீய
வெவிய வேலுடன் றாவியே மஞ்ஞை

வந்தருள் புரிந்தநஞ் செந்திலம் பதியார்
பந்தம தகற்றிடுங் கந்தவே டானே. (௮

நேரிசை வெண்பா.

வேளையுந் பூச்சேன் மினுக்குக் குலுக்கேன்செவ்
வேளையெம் பாலுற்றான் மேதினியிற்—கோளேதாக்
கீதெமக்குச் செய்தாலுஞ் செந்தூரான் றளிமெய்ப்
போதெமக்குச் செய்யும் புகழ். (௨0

கட்டளைக்கலித்துறை.

புகலொன்றி லாதவர் செந்தூரிற் கந்தனைப் போயிரப்ப
விகலொன்று சொல்வரா மன்பரைக் கொண்டவர்க் கீவதெவன்
நகலொன்று கங்கைகொண் டான்பெற்ற வாண்டியே நாமறிவோ
* மகலொன்று மில்லுமோ வன்குறத் தோகையு மானையுமே.

நேரிசை யாசிரியப்பா.

ஆன்குல மோங்கிய கோன்றரு மகளிர்
மான்குலத் தோடொரு வான்குல மோங்க
வருபவ ரிருவர் குரவணி மொய்ம்பின்
மருவிட விச்சை பொருந்திய தாலு
மொருமகன் பெயரே யருமையிற் பெற்ற
பெருமையி னாலு முரிமையிற் றங்கை
தருமனெனவே வருமுறை யாலு
மரிமரு மகனென் றுரிமையிற் பெயர்கொண்
முருகவிவ் வுலகோர் தருவழக் கொன்றிங்
குன்வயி னிகழ்ந்த தென்வயிற் கேண்மோ
பெற்றவன் குணங்கள் முற்றுமே தாங்கு
நற்றவப் புதல்வரு மற்றவன் சாயற்
சாற்றுமே யின்றிப் பெற்றவண் † முன்பி
னுற்றவக் குணமே பற்றிய தனையரு
மிற்றைநா ளுண்டா மற்றிவை தம்மு
ளெக்குணம் பெற்றாய் கீர்க்குணு சொல்லாய்
மாதுலன் குணமே போதுவ னுனக்கு
யேதெனின் மான்பின் காதலிற் சென்றான்
[illegible]ட் கானிற் றுள்ளியே யோடும்

---

* அகல்=மனவிசாலம்.

† முன்பின்=தமையன் தம்பி.

புள்ளிமான் கன்றும் வள்ளிபின் சென்றாய்
கன்றுடன் மலையி னென்றுமே யுறைவான்
குன்றெலா நீயும் வென்றியே புரிவாய்
பெருமா ளெனும்பே ருரிமையாப் பெற்றான்
பெருமா ளெனும்பே ரருமையாப் பெற்றா
யரவின் பகைமீ திறுமாந் தூர்ந்தா
னரவின் பகைமேற் குரவார்ந் தூர்ந்தாய்
களபமார் சந்த மளவிய வழகா
ளிளமுலை மாது ருளமிவர் கேணீ
கற்றையஞ் சடையனாற் பெற்றனனாழி
முற்றல னிடமே பெற்றனை யினைநீ
யவுணனைச் செற்றோ ரணங்கை முன்கண்டா
னவுணனைச் செற்றோ ரணங்கைநீ கொண்டா
யிவ்வா றிருப்பினுங் கௌவையொன் றில்லை
யத்தனைப் போலவே பத்தர்கட் கெல்லாஞ்
சித்தமாய் வீடரு ளுத்தம குணமு
மொத்தவு முடையாய் நிச்சமு மன்றோ
செவ்வாய் திறந்திவண் செப்பிடா யெந்தாய்
குங்குமச் சேற்றினைப் பொங்கிய புனலார்ந்
தங்கையாற் கழுவுங் கொங்கைமின் னார்க
ளிங்கிதங் கொஞ்சும் பங்கமி லொலியே
சங்கினி லொலிக்குஞ் செந்தூர்
சங்கரன் பங்கினி றங்குவாள் மகனே.

நேரிசைவெண்பா.

மகனென்றுன் மேற்பிரியம் வைத்ததெலாந் தாயே
மகனென்றும் பாராதே வைத்தான் — றகவின்றி
யத்தனுமே சாப* மறுமுகனே செந்தூரா
பித்தனுமே செய்தாலென் பேச்சு. (௨௬)

கட்டளைக்கலித்துறை.

பேச்சுக்கிங் குன்னையா னுமைநீ யென்றதார் பின்னொருவ
ரேச்சுக்குட் பட்டோ னேமாந் திருந்தவ ரென்னை மிகக்
காச்சுக்காச் சென்றிடக் கைகட்டி வாய்பொத்திக் கண்ச[illegible]
மூச்சுக்காட் டாதிருப் பாயோசெந் தூரா முத்தையனே

* ஊமைப்பிள்ளையாயது.

நிலைமண்டில ஆசிரியப்பா.

முத்தே நிரைத்த பத்தியோ மென்னச்
சுத்தமார் சொற்பொரு டத்திய பொலியும்
புத்தகம் பலவை வித்தகர் மெச்ச
வித்தகை ரீதே மெத்தவுஞ் செய்தா
னத்தியி னருளோ நித்தமும் பெற்று
முத்தியீ மற்ற வுத்தமி வாயால்
விதிதினம் பயிலும் பதியிவ்வாய்ச் சொல்லா
முதுநூ லெனும்பெரு சதுமறைப் பயனை
பொதியுமோர் பனுவ லிதமுறக் கேட்பான்
றன்னுமோர் நாவன் மன்னுமோ ரமைய
முன்னியா மெய்க்குஞ் சின்னவன் போலாய்
வந்துமுன் றோன்றி விந்தையாய்ப் பேசிச்
சிந்தையிற் பலவைப் பிந்தியே கொள்வான்
முந்தையோர் பலவைச் சிந்தினு மந்தோ
வேணிந்த வகையாய் நானிலந் தன்னிற்
பித்தலாட் டகத்தை * நித்தமுஞ் செய்த
லுள்ளதைச் சொன்னாற் கள்ளமென் றன்னோ
யெள்ளள வேனும் விள்ளுவர் கொல்லோ
சற்றுமே தானுங் குற்றமுன் பேரிற்
சொற்றலுந் தப்பேமற்றதும் வழிவழி
யுற்றதோர் செய்கை பிற்றைநா ளொழியா
பஞ்சவருடனே வஞ்சினங் கொண்டே
பிஞ்சினர் பலரோ டெஞ்சினு ரெவருந்
துஞ்சலே தாய்ப் பஞ்சைபோல் வந்தே
வஞ்சகம் பொய்தா னெஞ்சுற வுரைத்து
மாதவ னெனும்பேர் தீதறக் கொண்டான்
மருமகன் றானே திருமுருகா நீ
யாதலாற் செய்கை நீதிய செந்தூர்
வேதிய ரகத்துள் விளங்கிடும் விளக்கே. (உ௫)

நேரிசை வெண்பா.

விளக்கா யிருளகற்று மேலவர்க ளாக்கை
பிளக்குமாம் காமேனைப் பேணுந்—தளக்கருவி
யாகுமாஞ் செந்தூ ரறுமுகன்வே லென்பவர்பா
* அகலுமோ விங்கோ ரிடர். (உ௬)

† பித்தளை ஆடகம் என்னும் பதங்களின் திரிபு பித்தலாடகம்.

கட்டளைக்கலித்துறை.

படர்விளக் கின்றவை கேடரைக் கொன்றெ னிதையமதிற்
சுடர்விளக் கேற்றியஞ் ஞான விருளைத் துடைத்தெனையே
தொடர்வினைக் கட்டறுப் பாயே லடியார் தொகைமிகுநான்
மிடர்விழை வுற்றிடு மென்பயன் செந்தூரில் வித்தகனே. (உஎ)

நிலமண்டில வாசிரியப்பா.

வித்தைகட் கெல்லாங் கர்த்தனீ யென்றே
புத்தகஞ் சொல்லல் சத்திய மெனவே
யத்தமும் பயனு முத்தர்கட் கீவா
னிர்த்தனஞ் செய்வான் பத்தர்சொற் பனுவற்
கர்த்தமு மாவா னத்தினந் தந்த
களவியற் பொருளை யுளபடிக் கறிவான்
கழகமுற் றார்க்கு ளெழுமொரு வாதஞ்
பேசா திருந்துநீ கூசாது தீர்த்த
வன்று டானே தென்று டாகு
மின்று டெங்குஞ் சொன்னோர் புலவர்
முன்னோ ரென்றிங் கின்னே கேட்டு
நின்பதந் தொழவு மின்பதந் தந்தா
யன்பிதங் கொண்டிட செம்பதம் பாடின்
* முன்பருந் தருவா யென்பதுந் தேர்ந்தே
னென்னவா றேத்தி யுன்னையான் பாடக்
கன்னலுங் கமுகுந் தென்னையில் வளருஞ்
சோதியார் மாடம் வீதியார் செந்தூர்
சீதமார் வாரி மோதியே கரையிற்
சிந்திடு முத்தோ முந்தியச் சாகரம்
வந்திடு மமுதோ கொந்தவிழ் தருவோ
சிந்தா மணியோ நந்தா விளக்கோ
வெந்தோ வென்பேன் கந்தா வுன்னை.
யக்கரை மீதிற் கொக்கரை முழங்கப்
பக்கம திருவர் கைக்கிளி தாங்க
வொயின்மின் னார்கள் குயிலிற் பாடி
மயிலென நடிக்க வயில்கைக் கொண்டே
சந்தனம் புழுகு சாந்துகஸ் தூரி
விந்தையாய் களபம் விரவியே பூசி

* முன்...

உ ...தூர் மும்மணிக்கோவை.

கொக்கலர் பிச்சி குடைமுலை வாச்சி
யிந்துள முதலா யந்தமி லாருஞ்
சந்திக டோறுங் கந்தரந் தாங்கித்
தந்திரி மார்கள் வந்தனை புரிய
வந்தணர் முதலாய் வந்தவர்க் கெல்லாஞ்
சிந்தையிற் களிப்போ டெந்நேரத்துந்
தெரிசனந் தந்தே வரிசைசெய் வாரிற்
பகைம தறுப்பான் சந்தன முதலா
யிலைநீ றளித்தே யுலையிலா தென்றுங்
குணபா லேற்றிக் கனகவை வெவ்வே
மணியொலி தரநன் னெறிகலன் றுகில்
மணமக னெனவே குணமுட னுறையுங்
கோலங் காட்டி ஞாலமீ தடியனை
வேண்டுமா றெல்லா மீண்டுவந் தருளி
யென்னை யாட் கொண்டு முன்னை யானபாட
வுனனுபோ லெல்லாஞ் சொன்னயங் கேட்போர்
கன்னலுங் கைத்த தென்னவுந் தாகமின்
பொருளே தேர்வார் மருளா வண்ண
மருளே நிறைந்த பொருளே யெனவு
முறையே தந்துங் குறைதா னொருவ
ரியைமா வண்ணம் பொறையோ டருளா
யிறையா யெங்கு நிறைபரம் பொருளே. (௨

நேரிசை வெண்பா.

பொருவாகு முன்றகைப் பொற்றளியுள் ஞான
வுருவாகுஞ் செந்தூரா வுன்னைக்—குருவாகப்
பெற்றவனை ரென்றாலெம் பித்தன் மணக்கூட்ட
முற்றெவனோர் சொல்வேனுனக்கு. (௨

கட்டளைக்கலித்துறை.

உன்னுவா ரல்லாதார் காணாத செ... தூர்க்கந்தகந்தன்
றன்னருட் டாமரை மாமலர்ப் பாதந் தலைமிசை ...ங்
கின்னுண வோடுறக் கந்தூறந் தேடின மெய்த்த ...குச்
...ன்னியிற் றண்மலர் சூட்டினன் பூத்திடத் தி... னே.

... மும்மணிக்கோவை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்.

1. திருவாலவாய்ப் பதிகம்.
2. முருகக்கடவுள் வெண்பாமாலை.
3. ஆற்றாப்பதிகம்.
4. ஸ்ரீசோமசுந்தரர் திருவருண்மாலை.
5. ஷை வெண்பா.
6. புத்திரகடாக்ஷமாலை.
7. நாகேசுவரவெண்பா.
8. திருச்செந்தூர் முருகவெண்பா.
9. ஷை கண்டமாலை.
10. [illegible]
11. சன்னிதிவெண்பா.
12. [illegible]
13. ஷைகலிவெண்பா.

க

திருக்குருகாசித்தமடியம்

ஸ்ரீ ... யாகத்து ஸ்ரீ பச்சைமலைச் சித்தர் ... சந்நிதிவிட்ட அநுபவம் பெற்ற பல அற்புதங்களுடன் விளங்கும் திருக்கூட்ட ஸ்ரீ ... ஞானசித்தசுவாமிகள் திவ்வியசரித்திரத்தையும், சுவாமிகள் பாடியருளிய ஸ்ரீ புவனாம்பிகை சோடசயாக ... பலவற்றையும் இனிய செந்தமிழ்நடையில் இருபத்தைந்து மகாவித்துவான் சண்முகப்பிள்ளையவர்களால் எழுநூற்றுக்குமேற் செய்யுள் இயற்றப்பட்டு, மனோ புகழும் கல்வியறிவிற் சிறந்த புலவர் பலர் சிறப்புப்பாயிரமும் பெறப்பட்டு, பலருக்கும் கனதனவான்கள் விருப்பத்தின்படி மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அச்சிட்டுள்ளதோர் அருந்தமிழ் நூலாகும்.

அன்றியிடையிடையே சித்தசுவாமிகள் தம் உத்தம மாணாக்கர் பலருக்கு உபதேசித்தருளியிட்டது மாயாவாதக் கண்டனத்தையும், பரிபாக சொரூபணப்பொலிவையும், பக்தியின் மேன்மையையும், ஆயுர்வேதத்தின் நுட்பத்தையும், சித்தாசிரமச்சிறப்பையும், மந்திரயோகங்களிலுள்ள மர்மத்தையும் முதலான பல யோகங்களைக் விளக்கும். வேண்டுவோர் திருவானைக்கா சித்தாச்சிரம காரியதரிசியவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தபால்கூலியுள்பட இதன் விலை அணா 10

தி. ச. ஆறுமுகநயினார்,

நாஷனல் ஹைஸ்கூல், தமிழ்ப்பண்டிதர்.

திரிசிராப்பள்ளி

சித்தாந்தவசன பூஷணம்.

இஞ்ஞான சாஸ்திரமானது வேதாகமசாரமாய் விளங்குவதும் திருவருட்பெருஞ் செல்வர்களாகிய விவேகாதி சாதனசம்பந்நராய மோக்ஷகாமாதிகாரிகள் அனுபவிப்பதும், சுத்தாத்துவித சித்தாந்த உண்மையில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டுவதுமாகிய உண்மைஞானசாதனம், பதிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், சத்தசத்திலக்கணம், தசகாரியலக்கணம், அவத்தைவிலக்கணம், உணர்த்துமுறையிலக்கணம், தீக்ஷையிலக்கணம், சாதனவிலக்கணம், ஞானவிலக்கணம், ஞானிகளிலக்கணம், அத்துவிதமுத்தியிலக்கணம் என்பன பன்னிரண்டு லக்கணங்களால் விவரித்து, தெளிவான வசனரூபமாகச் செந்தமிழ்நடையில் எதிரிட்டாக்ஷேப பூர்வமாயும் ஆக்ஷேப சமாதானங்களுடனும், பரபக்ஷ சுபக்ஷமாயும் எழுதி அச்சிடப்பட்டுள்ளது. மனிதப்பிறப்பை எடுத்ததனால் அடையவேண்டிய முக்கியப்பிரயோசனம் இச்சாஸ்திரத்தினாலன்றியலா பெறப்படுதற்கில்லை.

இதன் விலை ரூபா க. வி. பி. சார்ஜுடன் க-௪-0.

பூவை - மணவழகுமுதலியார்

34 முனைவீதி, சென்னை.